**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

O.S. No.133/2018

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 27.09.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சுதா | ஜாதி | : |
| த /பெயர் : | செல்லதுரை | மதம் | : |
| கிராமம் : | | தொழில் | : சார்பதிவாளர் |
| வட்டம் : | | வயது | : |

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன. கடந்த 1619/1997ல் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிதழ் நகல் எடுத்து வந்துள்ளேன். ஒரு ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது தற்போது உள்ள நடைமுறையில் எழுதி கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவர் இருவரது கையொப்பம் அவசியம் என்றால் சரிதான். ஆனால் ஆவண 1996ல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட போது எழுதி கொடுப்பவர் மட்டும் கையொப்பம் செய்திருந்தாலே போதுமானது என்றால் சரிதான்.

2. பத்திர பதிவு எழுதி கொடுக்கும் ஆவணத்துடன் பத்திரங்கள் மதிப்பு குறைப்பு விதி 3/1968 ஸ்டேட்மெண்ட் வைக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் ஒரு சொத்திற்கு மேற்பட்ட சொத்துக்களை கிரயம் செய்யும் போது மேற்கண்ட ஸ்டேட்மெண்ட் வைக்கப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட சொத்துக்களை கிரயம் செய்யும்போது 3(1) ஸ்டேட்மெண்ட் வைப்பது வழக்கம் என்றால் சரிதான். ஒரு ஆவணம் எங்களிடம் முன்னிலை படுத்தப்படும் போது எழுதி கொடுப்பவர் கையொப்பம் உள்ளதா என்பது குறித்து சரிப்பார்க்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு ஒவ்வொரு பக்கத்திலும் எழுதி கொடுப்பவர் கையொப்பம் இல்லை என்றால் அந்த ஆவணம் முடிவுறா ஆவணம் என்று சொல்லி பதிவு செய்யாமல் திருப்பி கொடுத்துவிடுவோம். எழுதி கொடுப்பவரின் கையொப்பம் மேற்படி ஆவணங்களில் இருந்து சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பத்திர் பதிவு அலுவலகத்திற்கு நேரடியாக வந்து

பதிவு செய்து கொடுக்க தவறும் பட்சத்தில் சார்பதிவளார் அலுவலகத்தில் இருந்து அவருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டு அதில் ஒரு முடிவு காணமுடியும் என்றால் சரிதான்.

3. ஒவ்வொரு நாளிலும் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் குறித்து தனியாக கையேடு சார்பதிவாளர் பராமரித்து வருகிறதா என்றால் இல்லை. ஆனால் இன்டெக்ஸ் புத்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆவண எண். 206/1996ரை முடிவுறா ஆவணம் என்று சொல்லி அப்போதைய சார்பதிவளார் அவர்களால் பதிவு செய்ய மறுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு மறுக்கப்பட்ட ஆவணத்தை யார் முன்னிலைப்படுத்துவார்களோ அவர்களிடமே திருப்பி கொடுத்துவிடுவோம் என்றால் சரிதான். எழுதிக்கொடுப்பவரின் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் இல்லை என்றும் முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆவண எண். 206/1996யை முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுப்பதற்கான ஆவணங்கள் ஏதும் பராமரிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. சார்பதிவாளர் அவர்களால் அந்த ஆவணத்தில் முடிவுறா ஆவணம் என்று எழுதப்பட்ட குறிப்பு இருக்கும் என்றால் சரிதான். பதிவு செய்யப்படும் கிரைய சாசன ஆவணத்தில் கிரையம் செய்து கொடுக்கப்படும் வேறு ஒரு இடத்தில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றும் அடமானம் வைத்து கடன் பெறப்பட்டுள்ளது போன்ற வாசகங்கள் இருந்தால் பத்திரப்பதிவு செய்யாமல் திருப்பி கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். யாரால் சார்பதிவாளர் அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதோ அவரால் திரும்ப பெற்றுக்கொண்டு மாவட்ட பத்திர பதிவு அலுவலகத்தில் கட்டாய பதிவு தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான்.

5. முடிவுறா ஆவணம் என்று சொல்லி ஒரு ஆவணம் பதிவு செய்யப்படாமல் திருப்பி கொடுக்கப்படும் பட்சத்தில் அவற்றை மாவட்ட பத்திர பதிவு அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்படுவது என்றால் சரிதான். மாவட்ட பத்திர பதிவு அலுவலகரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில்தான் சார்பதிவாளர் அவர்களால் ஆவண எண். 1619/1997யை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பி 206/1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்துதான் ஆவண எண். 1619/1997 பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் மாவட்ட பத்திரவ பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட

உத்தரவு மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. ஏற்கனவே சார்பதிவாளரால் பதிவு செய்ய இயலாது என்று திருப்பப்பட்ட ஆவணத்தை மீண்டும் சார்பதிவாளரால் பத்திர பதிவு செய்யவேண்டும் என்றால் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்து கொடுத்த பிறகுதான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான்.

**6**.என்னிடம் காட்டப்படும் வா.சா.2 ஆவணம் 3வது பக்கத்தில் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் முடிவுறா ஆவணம் 206/1996யை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா.சாஆ. 2ஆவணத்தில் ஆவண எண். 4/1997 சான்றிட்ட நகல் எங்களது அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான். கட்டாய பதிவிற்கு ஒரு ஆவணம் தாக்கல் செய்யும்போது அதை பதிவும் செய்யும் நபர் மற்றும் எதிர்மனுதாரருக்கு மூன்று முறை அறிவிப்பு அனுப்பப்படும். ஆவண எண். பி 206/1996யை பொறுத்து மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்புகளின் ஒன்றை எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கவேண்டும் என்றால் சரிதான். அதுபோல மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பபட்டதாகவோ மனுதாரரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவோ எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். எழுதி கொடுத்தவரின் கையொப்பம் இல்லாததால் தான் அடிப்படையிலேயே அது பதிவு இயலாத முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் மன்னார்குடி சார்பதிவாளராக கூடுதல் பொறுப்பில் இருந்து வருகிறேன். நான் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக இருந்து வருகிறேன். கடந்த 2015 ஆம் ஆண்டில் பதிவுத்துறையில் பணிக்கு சேர்ந்தேன். கடந்த 1996–1997 ஆண்டுகளில் நான் பணிக்கு வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தபோது என்னென்ன ஆவணங்களை எடுத்து வரச்சொன்னார்கள் என்றால் 1997 ஆம் ஆண்டிற்கான ஆவணங்களை எடுத்து வரச்சொன்னார்கள் என்னென்ன ஆவணங்கள் என்று குறிப்பிட்டடு ஞாபகமில்லை. மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1898 வருடத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளது.

2. கடந்த 2003 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களும், 2003 லிருந்து கணினி நகல்களாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. புத்தகம் 1, புத்தம் 3 மற்றும் புத்தகம் 4 ஆக பராமரிக்கப்பட்டு வருகிறது. கிரையம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் புத்தகம் 1ல் பதிவு செய்யப்படும். ஒரு ஆவணம் பதிவு செய்யப்படும்போது அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட இதர ஆவணங்களும் கோப்பில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1996–1997 ஆண்டுகள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்திலுள்ளது.

3. ஒரு ஆவணம் Execusion மற்றும் Registration இரண்டு நிலைகளாக உள்ளது என்றால் சரிதான். Execusion என்பது எழுதிக்கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். Execusion முடிவடைந்த பிறகு அதில் சொல்லப்பட்டது போல் எழுதிக்கொடுப்பவர் வாங்குபவர் பண பரிமாற்றம் குறித்து விசாரித்த பின்பு தான் ஆவணங்கள் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தை பதிவு செய்யும்போது எழுதி வாங்குபவர் அல்லது எழுதிக்கொடுபவர் யார் வேண்டுமென்றாலும் பதிவுக்கு கொடுக்கலாம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணத்தை கிரையம் வாங்கிய நபர் தான் பதிவுக்காக முன்னிலைப் படுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதுக்குறித்து அலுவலக கோப்பில் உள்ளது என்றால் சரிதான்.

4. ஒரு ஆவணம் பதிவு செய்யப்படும் போது எழுதிக்கொடுத்த நபர் ஆஜரானால் அவரிடம் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் குறித்து விசாரிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த ஆவணம் தொடர்பாக எழுதிக்கொடுத்தவர் முன்னிலையாகாததால் பதிவு செய்ய இயலாது என்று சொல்லி அந்த ஆவணம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் Pending Registration என்று சொல்லி முடிவுறா ஆவணமாக கொடுக்கப்பட்டது. பிறகு அந்த முடிவுறா ஆவணம் மாவட்ட பதிவாளர் உத்தரவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு பதிவுக்கு தாக்கல் செய்த நபரிடம் திருப்பி கொடுக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

5. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் தற்போது வரை பதிவு துறை கோப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் பதிவு தன்மை குறித்து 77(1) பி–க்கு கீழ் எத்தனை நாட்களுக்குள்ளாக ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்யவேண்டும் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து வாதி தங்கமணி 1996 ஆம் ஆண்டிலிருந்து 2024 வரை எந்த ஒரு ஆட்சேபனையும் மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இந்த ஆவணங்கள் தொடர்பாக பதிவுத்துறை அலுவலர், துணை பதிவுத்துறை அலுவலர், நீதித்துறை, வருவாய்துறை ஆகியவற்றில் வாதியால் மேல்முறையீடு செய்ததாகவோ, அது சம்மந்தமாக சாட்சிக்கு அழைத்ததாக அலுவலக கோப்பில் இல்லை என்றால் சரிதான். நான் சாட்சியமளிப்பது பத்திர பதிவு சட்டத்தின்படியும், அதில் சொல்லப்பட்டுள்ள விதிகளின் படி தான் என்றால் சரிதான். பதிவுத்துறையில்

சொல்லப்பட்டுள்ள சட்டவிதிமுறைக்கு உட்பட்டு நான் சாட்சியம் அளிக்கமுடியும் என்றால் சரிதான்.

7. அலுவலக நடைமுறை என்று சொல்லி என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். ஒரு அரசு பணியாளர் செய்யக்கூடிய பணிகள் அனைத்தும் சட்டப்படி விதிமுறைகளுக்கு உட்பட்டு செய்யமுடியும் என்று கருத்தில் கொள்ளமுடியும் என்றால் சரிதான். பத்திர பதிவு அலுவலகத்தில் விதிமுறைகளை மீறி பத்திர பதிவு செய்ததாக எந்த ஒரு விண்ணப்பமும் வாதியால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவை மீறி சாட்சியம் அளிக்கமுடியாது என்றாலும், அவரது உத்தரவு தவறானது என்று கூறி சாட்சியம் அளிக்கமுடியாது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.27 18:36:55 +0530

District Munsif
Mannargudi.